# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2432/ 07 - 2025 අප්‍රේල් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.04.17**

2432/07 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டம்**

92 ஆவது பிரிவின் கீழான கட்டளை.

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரான அநுர கருணாதிலக ஆகிய நான், குறித்த சபைக்கு எகலியகொட நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் தலாவிடிய நீர் உள்வாங்கு கிணறு மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளதால் இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக,**
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

தொடர்பு இல. : DVP/02/04/KE/ 547.
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
செத்சிறிபாய, கட்டம் II,
பத்தரமுல்லை.
2025, ஏப்பிறல் 02.

**அட்டவணை**

இரத்தினபுரி மாவட்டத்தில், குருவிட பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 146, தலாவிடிய கிராம அலுவலர் பிரிவில், தலாவிடிய கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு. டபிள்யூ. ஏ. எஸ். த சில்வா அவர்கள் 2020 திசெம்பர்

07 ஆந் திகதியுடையதாக அளந்து தயாரிக்கப்பட்டுள்ள 2030 ஆம் இலக்க திட்டப்படத்தில் துண்டு இலக்கம் 04 என சுட்டிக் காட்டப்பட்டுள்ள கிரியாலகே ஹத்லாப என்றழைக்கப்படும் காணிப்பகுதியிலிருந்து 22.57 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளினுள் அமைந்துள்ள காணிப்பகுதி ;

**துண்டு இல. 01**

வடக்கு: துண்டு இல. 3 மற்றும் பிரதேச சபை வீதி ; கிழக்கு : பிரதேச சபை வீதி ; தெற்கு : துண்டு இல. 3 மற்றும் பிரதேச சபை வீதி ; மேற்கு : துண்டு இல. 3.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :

சப்பிரகமுவ மகா சமன் தேவாலயம், இரத்தினபுரி.

ஏ. டி. பர்ணாட் நிஸ்சங்க விஜயதாச
அமுனுபொல நிவச,
தலாவிடிய, பரகடுவ.

எம். எல். நிமல் தயாநந்த
தலாவிடிய, பரகடுவ.

EOG 04 - 0113

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.